

உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வழங்கும் திட்டத்தினை விழுப்புரம் திரௌபதி அம்மன் கோவில் தெருவிலுள்ள அங்கன்வாடி மையத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைகள் துறை அமைச்சர் திருமதி பெ.கீதா ஜீவன் துவக்கி வைத்தார். பானாம்பட்டில் உள்ள கிருபாலயா முதியோர் இல்லத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். விழுப்புரம் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு இந்த ஆண்டிற்கான புத்தகங்களை வழங்கினார். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி. பழனி, மாவட்டச் செயலாளர் நா. புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ. புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகரமன்றத் தலைவர் ச. தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம் தாராபுரத்தில் நெடுஞ்சாலை துறை சார்பில் முதல் கட்டமாக 300 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், தாராபுரம் நகர்மன்றத் தலைவர் கு.பாப்புகண்ணன், நகர கழக செயலாளர் சு.முருகானந்தம், கோட்டப் பொறியாளர் உதவி கோட்டப் பொறியாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சியாமளா நவநீதகிருஷ்ணன் தலைமையில் பொள்ளாச்சி நகர தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி - சேலம் சுஜாதா - தளபதி முருகேசன் சிறப்புரை!

கோவை, ஜுன் 14 -

கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி நகர தி.மு.க. சார்பில் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தெருமுனை பிரச்சாரக் கூட்டம் இன்று (14.6.2023 புதன் கிழமை) மாலை 5 மணிக்கு புதிய பேருந்து நிலையம், மாலை 5.30 மணிக்கு மீனாட்சி மண்டபம், ரவுண்டானா, மாலையில் 6 மணிக்கு, டீச்சர்ஸ் காலனி, மாலை 6.30 மணிக்கு பூ மார்க்கெட், மாலை 7 மணிக்கு கண்ணப்பன் நகர், மாலை 7.30 மணிக்கு குமரன் நகர் ஆகிய இடங்களில் பெறுகிறது.

நகர் மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

பொள்ளாச்சி நகரக் கழகச் செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன், ஆர்.நாச்சிமுத்து, ஏ.பாத்திமா அக்பர், ஸ்வீட் நாகராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

எஸ்.உமா மகேஸ்வரி இந்திரா கிரி, போர்வெல் துரை, கே.சுதா, கே.கலைவாணி, வி.ஜோதிமணி, இ.ஆர்.பழனிச்சாமி, சே.மணிமாலா, எம்.கவிதா எஸ்.கந்தமனோகரி, கே.கீதாலட்சுமி, டேஸ்டி பாலு (எ) இளமாறன், மா.மாணிக்கராஜ், ஜெ.லோகநாயகி, சு.தங்கவேல், ஏ.பாலகிருஷ்ணவேணி, எஸ்.விஜயா காயத்ரி, பி.சரிதா, எம்.பெருமாள், எஸ்.சண்முகப்பிரியா, பி.ஏ. செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டங்களில் மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, தலைமை கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா, மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் மு.கண்ணப்பன், கு.சண்முகசுந்தரம், டாக்டர் ஆர்.மகேந்திரன், இரா.தமிழ்மணி, கே.எம்.நாகராஜ், ஜி.ஏ.அதிபதி, தென்றல் செல்வராஜ், மருத்துவர் கி.வரதராஜ், திப்பம்பட்டி ஆறுமுகம், பணப்பெட்டி தினகரன், வி.பி.சந்திரசேகர், மா.சண்முகம், மு.க.முத்து, எம்.அமுதா பாரதி, எஸ்.ஜெயக்குமார், ஆட்சிப்பட்டி பாலு, கே.வி.சுப்பிர மணியம், பா.கா.சாமிநாதன், சி.பொன்னுச்சாமி, சே.கனிமொழி, எஸ்.ஜெயபிரகாஷ், கிரி கதிர்வேல், சே.ஆ.துரை, வே.மருதுவேல், பி.ராஜி, கி.ரமேஷ் மற்றும் பொள்ளாச்சி நகர கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர்.

நகர் மன்ற துணைத் தலைவர் எஸ்.கௌதமன் நன்றி கூறுகிறார்.

### விழுப்புரம் மாவட்டம் - திண்டிவனம் - செஞ்சியில்

# முத்தமிழ் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், ஜுன் 13 -

விழுப்புரம் மாவட்ட நெடுஞ்சாலை துறை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திண்டிவனம், மரக்காணம் ஆகிய பகுதிகளில் 5000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி திண்டிவனம் பைபாஸ் சாலை அருகில் நடைபெற்றது.

நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர் சிவசேனா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 3500மரக்கன்றுகள் நட்டு வைக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், மாவட்ட பொருளாளர் ராமணன், உதவி கோட்ட பொறியாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**செஞ்சி உட்கோட்டம் :**

செஞ்சி, மேல்மலையனூர் தாலுக்காவில்முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 5000மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்ட நெடுஞ்சாலை துறை சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சி, மேல்மலையனூர், வட்டங்களில் 5000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி மழுவந்தாங்கல் சாலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் சிவசேனா தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

செஞ்சி உதவி கோட்ட பொறியாளர் ராஜேந்திரதாஸ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 5000 மரக்கன்றுகள் நட்டு வைக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் உதவி பொறியாளர் ஏழுமலை, சாலை ஆய்வாளர் சந்திரா, மாவட்டப் பிரதிநிதிகள் அய்யாதுரை, கோடீஸ்வரன், உள்ளிட்ட சாலை பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### செட்டிபாளையம் பேரூராட்சி துணைத் தலைவர்

# சு.முத்துகுமார் மறைவு!

## தளபதி முருகேசன் - கழகத்தினர் அஞ்சலி!

கோவை, ஜுன் 14 -

கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், செட்டிபாளையம் பேரூராட்சி துணைத் தலைவர் சு.முத்துகுமார் (வயது 52) 12.06.2023 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூராட்சி கழக நிர்வாகிகள், வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் திரண்டு வந்து அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.




